# தமிழ் இணைய மாநாடு 2010

## கருத்தரங்கம்

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டோடு இணைந்து 9வது தமிழ் இணைய மாநாடு வரும் சூன் மாதம் 23 முதல் 27 வரை கோவை, தமிழ்நாட்டில் நடைபெற உள்ளது.

## தமிழ் இணைய மாநாட்டின் முக்கியக் குறிக்கோள்கள்

- இணையத் தமிழ் மற்றும் கணினியில் தமிழின் வளர்ச்சி, அவற்றிலுள்ள வருங்கால வாய்ப்புகள் மற்றும் அவற்றை நிறைவேற்ற தேவையான செயல் திட்டங்கள்
- செம்மொழி அறிஞர்களோடு தமிழ் கணினி வல்லுநர்களையும் பிணைப்பது
- இளைய தலைமுறையினருக்கு தமிழ் இணைய ஈடுபாட்டை வளர்ப்பது
- பொது மக்களிடையே தமிழ் இணைய வளர்ச்சியையும், பயன்பாடுகளையும் விளக்குதல்

இம்மாநாடு கருத்தரங்கம், சமுதாய ஈடுபாடு, கண்காட்சி ஆகிய மூன்று சிறப்புக் கூறுகளைக் கொண்ட முழு அளவிலான மாநாடாகும். இம்மாநாட்டு அரங்குகள் தமிழ் கணிணியம், பொதுவான தமிழ் இணையம் ஆகியவற்றின் அண்மைக்கால முன்னேற்றங்கள், சவால்கள் குறித்து விரிவாக ஆராயும் தொழில்நுட்பக் குழுவாக விளங்கும். ஆய்வரங்கத்தின் நோக்கம் ”இணையம் வளர்க்கும் தமிழ்“ (Internet Enriching Tamil). 400க்கும் மேற்பட்ட உலக அளவிலான தமிழ் இணையத் தொழில் நுட்ப வல்லுனர்களும், ஆய்வறிஞர்களும் இம் மாநாட்டில் பங்கு பெற உள்ளனர்.

இம்மாநாட்டின் கருத்தரங்கத்திற்கு 400க்கும் மேற்பட்ட கட்டுரைச் சுருக்கங்கள் பெறப்பட்டுள்ளன. மைக்ரோசாப்ட், அடோபி, யாஹு, கூகுள், ஐ.பி.எம் போன்ற தமிழ்ச் சேவையில் ஈடுபட்டுள்ள பன்னாட்டு நிறுவனங்கள் குறித்தும் கட்டுரைச் சுருக்கங்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றிலிருந்து கருத்தரங்க குழுவால் 138 கட்டுரைகள் தெரிவு செய்யப்பட்டு கருத்தரங்கத்தில் இடம் பெறவுள்ளன.

## அரங்குகளின் பெயர்கள்

இம்மாநாட்டில் ஒரு முகப்பரங்கமும் 4 ஆய்வரங்கங்களும் அமைந்துள்ளன. முகப்பரங்கத்திற்கு 1999ம் ஆண்டு தமிழகத்தில் உலகளாவிய தமிழ்க் கணினி மாநாட்டை நடத்திய முன்னாள் மத்திய அமைச்சர் அமரர் திரு. முரசொலி மாறன் அவர்களின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. 1999ம் ஆண்டு எடுக்கப்பட்ட முடிவுகளே அடுத்த பத்தாண்டுகளாக தமிழ்க் கணினி வளர்ச்சிக்கு வித்திடும் வகையில் அமைந்துள்ளது. மற்ற நான்கு ஆய்வரங்கங்களுக்கு தமிழ்க் கணினி ஆர்வலர்கள் மற்றும் வல்லுநர்களாகிய மறைந்த எழுத்தாளர் சுஜாதா, சிங்கப்பூர் நா. கோவிந்தசாமி, துபாய் உமர் தம்பி மற்றும் இலங்கை யாழன் சண்முகலிங்கம் ஆகியோரின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.

இம்மாநாட்டின் ஆய்வரங்கங்கள் 4 அரங்குகளில் 36 நிகழ்வுகளாக (Sessions) இடம் பெறவுள்ளன. இதில் 15 தலைப்புகளிலிருந்து 138 ஆய்வு கட்டுரைகள் இடம் பெறுகின்றன. ஒரு நிகழ்விற்கு தலா 3-4 கட்டுரைகள் வாசிக்கப்படும். ஒரு கட்டுரைக்கு 25 முதல் 30 நிமிடம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் கலந்துரையாடல்களும் இடம் பெறும்.

இம்மாநாட்டிற்கு 400 க்கும் மேற்பட்ட சிறப்பு விருந்தினர்கள் பேச்சாளர்கள் மற்றும் நோக்காளர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர், அவற்றுள் 73 (20 சிறப்பு விருந்தினர், 20 பேச்சாளர்கள், 33 நோக்காளர்கள்) வெளிநாட்டினர் மற்றும்

வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் இடம் பெற்றுள்ளனர். முனைவர் ஜீன் லுச் சிவல்லார்டு, CNRS பல்கலைக்கழகம், பாரீஸ், மைக்கேல் கப்லன் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

மேலும் இந்தியா மற்றும் தமிழகத்திலிருந்து 143 பேச்சாளர்கள், 185 நோக்காளர்களும் இடம் பெற்றுள்ளன்ர். கூகுள், யாகு, மைக்ரோசாப்ட், ஐ பி எம் போன்ற நிறுவனங்களிலிருந்து 12 சிறப்பு விருந்தினர்கள் பங்கு பெறவுள்ளனர்.

## அரங்குகளின் தலைமை

இவ்வாய்வரங்குகளுக்கு திரு முத்துகுமார் ஆறுமுகம், முனைவர் ஆ ரா சிவகுமாரன், முனைவர் எம் கணேசன், திரு மணி எம் மணிவண்ணன், வா மே சே கவியரசன் (அமெரிக்கா), திரு அருண் மகிழ்நன் (சிங்கப்பூர்), முனைவர் சீதா லட்சுமி, திரு முத்து நெடுமாறன் (மலேசியா), செல்வி சுபாஷிணி டிரம்மல் (ஜெர்மனி). திரு முகுந்தராஜ் (ஆஸ்திரேலியா), திரு மணியம் (சிங்கப்பூர்) மற்றும் பலர் தலைமை ஏற்கவுள்ளனர்.

திரு அஜய் பாண்டே, அடோப் இந்தியா. திருமதி ஸ்வரண் லதா, TDIL , திரு ஏ. குமரன், மற்றும் திரு. மைக்கேல் எஸ் கப்லன். மைக்ரோசாப்ட், திரு. ஏமந்த் டாபாரி, அனுராதா லீலீ, CDAC ஆகியோர் சிறப்பு பேச்சு வழங்கவுள்ளனர்.

## தலைப்பு வாரியாக ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் நிகழ்வுகளின் எண்ணிக்கை

| தலைப்பு | நிகழ்வுகள் (Sessions) | ஆய்வுக் கட்டுரைகள் |
| --- | --- | --- |
| கணிப் பொறி வழி தமிழில் கற்றல் (Learning of Tamil through Computer) | 7 | 26 |

| | | |
|---|---|---|
| வலை பூக்கள் (Blogs) | 1 | 4 |
| கணிப்பொறி மொழியியல் (Computer language) | 6 | 21 |
| தமிழ் மின் தரவு மற்றும் மின்னகராதிகள் (Tamil Databases and Electronic Dictionaries) | 2 | 8 |
| இணையத் தொழில்நுட்பத்தில் தமிழ் மொழி மற்றும் திறவூற்று செயலிகள் (Tamil Language in Internet Technology and Open Source Standard) | 2 | 8 |
| கையடக்க பேசியில் தமிழ் (Tamil Mobile Devices) | 1 | 4 |
| தரவுத் தளங்கள் & தேடல் கனிமங்கள் ( Data Centers and Search Engines) | 2 | 8 |
| கணினியில் தமிழ்ப் பேச்சு மற்றும் சொற்பகுப்பு ஆய்வு (Computer based Tamil Speech and Speech Analysis Research) | 3 | 11 |
| மின்னரசும் தமிழ் தகவல் தொழில் நுட்பமும் (e-Governance and Tamil Information Technology) | 2 | 8 |
| கணினி வழி தமிழ் எழுத்து உணரி செயற்பாடுகள் (Software for Recognizing Tamil Text) | 3 | 12 |
| தமிழ் ஒருங்குறி மற்றும் தட்டச்சு (Tamil Unicode and Typing) | 2 | 9 |
| கணினி வழி கல்வி (Computer based Teaching) | 1 | 4 |
| கணினி மொழியியல் (Tamil Linguistic computing) | 2 | 8 |

| | | |
|---|---|---|
| தமிழில் தேடு பொறிகள்(Tamil Search Engines) | 1 | 4 |
| இணைய வழி கல்வி (Learning and Teaching through Internet) | 1 | 3 |
| மொத்தம் | 36 | 138 |

பல்வேறு தலைப்புகளின்கீழ் கருத்தரங்கில் இடம் பெற்றுள்ள சில கட்டுரைகளின் விவரம்

<u>கணிப் பொறி வழி தமிழ் கற்றல்</u> <u>மொத்தக் கட்டுரைகள்</u> **<u>26</u>**

- சிங்கப்பூரில் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் கணினியின் பயன்பாடு ( முனைவர் ஆ.ரா. சிவகுமாரன்)
- மடிக் கணினியில் கன்னித்தமிழ் - ஒரு கற்றல் அனுபவம் (திரு. சம்பந்தம் மோகன், சிங்கப்பூர் மற்றும் மூவர்)
- கல்விக் கூடத்தில் தமிழ் உபயோகத்தினைத் தரப்படுத்துதல் (திரு.வி. ராமன்)
- அமெரிக்காவில் நடத்தப்படும் தமிழ்ப் பள்ளிகூடங்களில் நடைமுறையில் இருக்கும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல (திரு. இளங்கோ மெய்யப்பன், கலிபோர்னியா தமிழ் அகாடமி)
- மின்னணு வழியில் தமிழ் மொழி கற்பித்தல் மற்றும் கற்றல் (எம்.ஜே.ரபி சிங், மாநிலக் கல்லூரி )
- தொடக்கக் கல்வி நிலையில் தமிழ் கற்பித்தல் மற்றும் கற்றல்( நிர்மலா தேவி, Govt. Institute Of Advanced Study in Education)
- தமிழ் எழுத்துணர்களின் அமைப்பும் திறன் அறிதலும் - (செய்மா சாகி)
- கணினி வழி மாணவர்களிடத்தில் தமிழ் மொழியை வளர்த்தல் மற்றும் பல (சிவகௌரி கலியமூர்த்தி, சிங்கப்பூர்)

**<u>வலைப் பூக்கள் (Blog)</u>** மொத்தக் கட்டுரைகள் 4

தமிழ் வளர்ச்சியில் வலை பூக்கள் (முனைவர் துரை மணிகண்டன்)

- வளர்ந்து வரும் மலேசியத் தமிழ் இணைய ஊடகம்(திரு.சுப நற்குணம், திருத்தமிழ்)
- அதிகார மையங்களும் வலைப்பதிவுகளும் (முனைவர் இளங்கோ)
- தமிழ் வலைப் பதிவுகள் கனிமக் கருவிகள் உரைத் தொகுப்பான் மற்றும் பல (திரு. காசி ஆறுமுகம்)

**<u>கணிப்பொறி மொழியியல்</u>** மொத்தக் கட்டுரைகள் 21

- தமிழ் மொழிக்கான உருபனியல் உருவாக்கி (திரு, ஆனந்த குமார்)
- தேவாரத்தில் வினைச்சொல் திணை அமைப்புகள் (முனைவர் ஜீன் லுச் சிவல்லார்டு)
- சங்க இலக்கியத் தொடரடைவி (முனைவர் உமாராஜ்)
- தமிழ் தரவின் தன்மைகளும் கணினியின் ஏற்புத் திறனும் மற்றும் பல (முனைவர் டேவிட் பிராபகர்)

**<u>தமிழ் மின் தரவு மற்றும் மின்னகராதிகள்</u>** மொத்தக் கட்டுரைகள் 8

- தமிழ் மரபு சார்ந்த தகவல்களின் தகவல் வங்கி, மின்நூல்கள், ஓலைச் சுவடிகளின் ஒருங்கிணைக்கப்பட்ட இணைய அட்டவணை (செல்வி சுபாஷிணி டிரம்மல், ஜெர்மனி)
- மின்னணு நூலகம் - மலேயாப் பல்கலைக் கழகம் (திரு. இளங்குமரன்)
- தமிழில் தேடுபொறி (திரு. எம். எஸ்.முரளி)
- தமிழகத்தில் மின்னணு கனிமங்களின் பயனை அதிகப்படுத்தல் - தரவுகளை பகுப்பாயும் கனிமங்கள் (திரு. ஜெயபிரபு, காருண்யா பல்கலைக்கழகம்)

- தமிழ் நாடு விவசாயிகளுக்கான விவசாய தளங்களில் நீடிக்கப்பட்ட குறுகீட்டு மொழி தகவல் அளிப்பு முறையும் புள்ளி விவர ஆவன மொழிபெயர்ப்பும் (செல்வி டி. தேன்மொழி) மற்றும் பல

**இணையத் தொழில்நுட்பத்தில் தமிழ் மொழி மற்றும் திறவூற்று செயலிகள்** (மொத்தக் கட்டுரைகள் 8)

- தமிழ் இணைய சமூகங்களுக்கான தமிழ் இணையப்பக்கங்களை வேகமாக வெளியே கொண்டு வருதல் (முனைவர் ஏ. விஜயராகவன்)
- தமிழில் பன்னாட்டு இணைய முகவரி (திரு, எஸ். மணியம், சிங்கப்பூர்)
- கருத்துருக்கள் விசைப்பலகை அமைப்புகள் (திரு. ஏ. ஆர். அமைதி ஆனந்தன்)
- வணிக மற்றும் சொந்த பயனுக்கான இலவசத் தட்டச்சு இணைப்பு கனிமம் மற்றும் பல (திரு. அபினவ சிவக்குமார்)

**கையடக்க பேசியில் தமிழ்** (மொத்தக் கட்டுரைகள் 4)

- தமிழில் செல்லிட ஆளுகை (திரு. அண்ணாக் கண்ணன்)
- திருக்குறள் கையடக்கத் தொலைபேசி அனைவருக்குமான பண்பாட்டுக் கருவி (திரு. ஜி. புவன் பாபு)
- செல்பேசிகளில் தரப்படுத்தப்பட்ட தமிழ் இடைமுகம் (திரு. எம். சிவலிங்கம்)
- தமிழ் செல்லினக் கல்விக்கான கனிமக் கட்டமைப்பு (செல்வி. சுவர்ணலதா)

**தரவுத் தளங்கள் & தேடல் கனிமங்கள்** (மொத்தக் கட்டுரைகள் 8)

- தமிழ் ஆவணங்களுக்கான நீண்ட கால பராமரிப்பு வழி முறைகள் ( திரு. மணி. மு மணிவண்ணன்)
- இணையத்தில் தமிழ் மின் அகராதிகள் : ஒரு பார்வை (திரு. மணியரசன் முனியாண்டி)

- மக்கள் தொகை கணக்கெடுப்பு விண்ணப்ப படிவத்தில் தமிழில் தானியங்கு ஆய்வு மற்றும் பல (ஸ்வப்நில் பெல்கே)

**<u>கணினியில் தமிழ்ப் பேச்சு மற்றும் சொற்பகுப்பு ஆய்வு</u>** (மொத்தக் கட்டுரைகள் 11)

- கோர் - பொருண்மையடிப்படையிலான உயர்நிலை தேடல் கனிமம் (செல்வி டி.வி. கீதா)
- கையடக்கக் கணினிகளில் தமிழ் எழுத்தணரிகளை அமைப்பு உணரல் முறையில் உருவாக்கல் (திரு, பெர்டின் ஜோ ஜோ)
- கணினியியலில் தமிழ்ப் பயன்பாடு மற்றும் பல (திருவள்ளுவன் ஐ)

**<u>மின்னரசும் தமிழ் தகவல் தொழில்நுட்பமும்</u>** (மொத்தக் கட்டுரைகள் 8)

- மின்னாளுமை இணைச் செயலகம் (திரு. ஆல்பர்ட் பெர்னாண்டோ)
- மின் வணிக அரச வழங்கும் மின் அட்டையின் செய்திச் சுருக்கத் தொழில் நுட்பத்திற்கான வடிவமைப்பு (திருமதி விஜயலட்சுமி)
- பாராளுமன்ற மற்றும் மாநில உறுப்பினர்களின் விவரத் தரவுகளை சிறந்த முறையில் நிர்ணயிக்கும் இணையப் பக்கம் (திரு. சையத் உசேன்)
- தமிழ் மற்றும் தமிழல்லாத பயன்பாட்டாளர்களுக்கான செய்திக் கொணர் கனிமம் மற்றும் பல (திருமதி. ஸ்ரீவித்யா)

**<u>கணினி வழி தமிழ் எழுத்து உணரி செயற்பாடுகள்</u>** (மொத்தக் கட்டுரைகள் 12)

- தமிழ் சொற்களை உணரும் கணிமத்துக்கான குறிக்கப்பட்ட கையெழுத்து உரைத் தரவு உருவாக்கல் (செல்வி நேத்ரவதி)

- தமிழ் எழுத்துணரிகளின் தயாரிப்பில் உள்ள சிக்கல்கள் (செல்வி ஆர் திவ்யபாரதி)
- லாலா தமிழ் பாடல் பகுப்பாய்வு மற்றும் பாடல் எழுதும் கனிமம் (செல்வி சௌம்யா)
- தமிழ் இணையப் பல்கலைக்கழக மென்பொருள்கள் ஒரு கண்ணோட்டம் (முனைவர் பீ ஆர் நக்கீரன்)

**<u>தமிழ் ஒருங்குறி மற்றும் தட்டச்சு</u>** (மொத்தக் கட்டுரைகள் 9)

- இந்திய அச்சு நிறுவனங்களில் ஒருங்குறியின் நிலை (திரு. பழனியப்பன்)
- கனிமக் கட்டமைப்பிலும் செயற்கை மொழி பகுப்பாய்வுக் கனிமங்களிலும் ஒருங்குறியின் பயன்பாட்டில் சிக்கல்கள் (திரு. வி. கிருட்டிணமூர்த்தி)
- மின் வழி ஊடகங்களில் தமிழ் எழுத்துருக்கள் ஒரு ஆய்வு (திரு. அன்பரசன்)
- தமிழ் தட்டச்சுக் கனிமங்களின் வடிவமைப்பு, வளர்ச்சி மற்றும் பல (திரு ரவீந்திரன், மலேசியா)

**<u>கணினி வழி கல்வி</u>** (மொத்தக் கட்டுரைகள் 4)

- கலைஞர் தமிழ் பேசும் கணினிக்கண் உருவாக்கத் திட்டம் (முனைவர் ஆர் ஜெயசந்திரன்)
- தொலைத்தூர தமிழ்க் கல்வியில் இணையம் வழிக் கற்றலின் பங்களிப்பு (திரு மன்னர் மன்னன் மருதை, மலேசியா)
- கற்பிக்க மற்றும் கற்க சிறந்த செய்தி வாய்ப்புகள் கொண்ட மின் வசதிகள் (திரு வி தங்கவேல்)
- தேடல் - தமிழ் இணையத் தகவல்களைத் தேடும் தேடுபொறிகளின் மன்னர் (செல்வி சோப லலிதா)

**கணினி மொழியியல்** (மொத்தக் கட்டுரைகள் 8)

- கணினியில் தமிழும் பிற திராவிட மொழிகளும் (செல்வி ராதா செல்லப்பன்)
- அறிவுசார் வெளிபாட்டிற்காக வரையறுக்கப்பட்ட அகராதி (திரு. இராஜேந்திரன்)
- தமிழிற்கான அதி துல்லிய தொலை பேசிக் குரல் அங்கீகரிப்பு அமைப்பு (திரு சி பி சந்தோஷ்குமார்)
- தமிழ் எழுத்துப் பிரதி எடுப்பதில் ஏற்படும் பல்வேறு முரண்பாடுகளைப் பற்றிய ஆய்வு (ஷம்பவி ராஜேஷ்)

**தமிழில் தேடு பொறிகள்** (மொத்தக் கட்டுரைகள் 4)

- தமிழ் இணையத் தளமும் தேடு பொறிகளும் (திரு கபிலன்)
- இடைமுகத் தமிழ் உள்ளீட்டு மென் பொருட்கள் ஓர் ஒப்பீடு (திரு பன்னிருகை வேலன்)
- இயந்திர மொழி பெயர்ப்பிற்கான அகராதி உருவாக்கம் (Lexicon for Machine Translation) (முனைவர் பா குமார்)

**இணைய வழி கல்வி** (மொத்தக் கட்டுரைகள் 3)

- மூடுல் -_மேம்பட்ட முறையில் கற்க, கற்பிக்க(தமிழ் மொழி) (திரு ரவிஷங்கர் சோமசுந்தரம்)
- தமிழ் இணையப் பல்கலைக் கழகம் - தரப்பகுப்பாய்வு (திரு எஸ் ராஜ்குமார்)
- தொடக்கப் பள்ளிக்கு தேவையான தமிழ்க் கணினி தேவைகள் இம்மாநாட்டில் 65 வெளிநாட்டு பிரமுகர்களும். (திரு ஆன்டோ பீட்டர்)

இக்கருத்தரங்குகள் 24.06.2010 முற்பகல் தொடங்கி 27.06.2010 அன்று நிறைவுப் பெறும்.

# தமிழ்க் கணினிக் கண்காட்சி

தமிழ் இணைய மாநாட்டின் மற்றுமொரு பகுதியாக "தமிழ்க் கணினிக் கண்காட்சி" கோவையில் கொடிசியா வளாகத்தில் சூன் மாதம் 23 முதல் 27 வரை நடைபெறவுள்ளது இக்கண்காட்சியின் நோக்கம் கடைக்கோடி தமிழனுக்கும் கணினித் தமிழ்.

இக் கண்காட்சிக்காக 27000 சதுர அடி நிலப்பரப்பில் 123 சிறு அரங்குகள் கொண்ட முழுவதும் குளிர் சாதன வசதி செய்யப்பட்டுள்ள கண்காட்சிக் கூடம் அமைக்கப்பட்டு வருகிறது.

இவ்வரங்குகளில் மின் ஆளுமை மண்டலம் (e-Governance Zone), தமிழ் பன்னாட்டு நிறுவனம் (MNCs in Tamil), தமிழ் வன்பொருள் மண்டலம் (Tamil Hardware Zone), தமிழ் மென்பொருள் மண்டலம் (Tamil Software Zone). தமிழில் மின்-பருவ இதழ் மண்டலம் (e-Magazine in Tamil Zone), தமிழ் மின்கருவி மண்டலம் (Tamil Devices Zone), தமிழ்ப் பல்லூடக மண்டலம் (Tamil Multimedia Zone), தமிழ் விக்கிப்பீடியா மற்றும் வலைப்பூக்கள் (Tamil Wikipedia and Blogs), கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் (Academic and Research Institutions) ஆகிய பிரிவுகளின் அடிப்படையில் அரங்குகள் அமைக்கப்பட உள்ளன.

இது நாள் வரை ஏறத்தாழ 100 அரங்குகள் முன் பதிவு செய்யப் பட்டுள்ளன. இவற்றில் 43 இந்திய / பன்னாட்டு தனியார்

நிறுவனங்கள், பத்திரிக்கைத் துறைகள், மற்றும் 30 அரசு நிறுவனங்கள், பல்கலை கழகங்கள் இடம் பெற்றுள்ளன,

**<u>மின் ஆளுமை மண்டலம்</u>** மத்திய மற்றும் மாநில அரசுத்துறைகளில் மின்-ஆளுமை வலைவாசலாக அமைக்கப்பட்டுள்ளது. இதில் தமிழ் நாடு தகவல் தொழில் நுட்பத் துறை சார்பாக தமிழ்நாடு மின்னணு நிறுவனம், தமிழ்நாடு மின் ஆளுமை முகமை, பன்னாட்டு தமிழ் இணையம், மக்கள் கணினி மையம், மிடுக்கான வகுப்பறை ஆகிய அரங்குகள் நிறுவப்படவுள்ளன. இணையம் வாயிலாக பிற்படுத்தப்பட்டோர் நல வாரியத்தின் மூலம் வழங்கப்படும் படிப்பு உதவித் தொகை, வருவாய்த் துறை வாயிலாக வழங்கப்படும் சாதிச் சான்றிதழ், வருவாய்ச் சான்றிதழ், பிறப்பிட சான்றிதழ், சமூக நலத்துறை மூலம் வழங்கப்படும் 5 மகளிர் திருமண உதவி திட்டம், குடும்பத்தில் முதல் பட்டதாரிக்கு வழங்கப்படும் உதவித் தொகை ஆகியவை விளக்கப்பட உள்ளன.

மேலும் தமிழ்நாடு சுகாதாரத் திட்டம் (TNHSP), தமிழ்நாடு மின்சார வாரியம், காவல் துறை, கோவை மாநகராட்சி, தமிழ்நாடு வேளாண் விற்பனை வாரியம், போக்குவரத்துத் துறை, பொதுப் பணித் துறை, வணிகவரித் துறை, மாவட்டத் தொழில் மையம், தொழில் வணிகத் துறை, உயர் கல்வித் துறை, சுற்றுலாத் துறை, பல்லவன் போக்குவரத்து கன்சல்டன்சி. பதிவுத் துறை, வருவாய்த் துறை, பதிவாளர் கூட்டுறவு சங்கம் ஆகிய அரசுத் துறை நிறுவனங்கள் மக்கள் பயனபடுத்தக் கூடிய அரசு மின் ஆளுமை செயல்பாடுகளை விளக்கவுள்ளனர்.

மத்திய தகவல் தொழில் நுட்பத் துறை ஆறு அரங்குகளை அமைக்கவுள்ளது. இத்துறை 50000 தமிழ் ஒருங்குறி குறுந்தகடுகள் பார்வையாளர்களுக்கு வழங்கவுள்ளது. மேலும் மத்திய நிறுவனங்களான பாரத் சன்சார் நிகாம் லிமிட், சென்டர் பார் டெவலப்மென்ட் ஆப் அட்வான்ஸ்டு கம்யூட்டிங், மகாராஸ்டிரா அரசை சார்ந்த மகாராஸ்டிரா நாலட்ஜ் கார்ப்பரேஷனும் தங்களது அரங்குகளை அமைத்து அவர்களின் மின் ஆளுமை செயற்பாடுகளை விளக்கவுள்ளனர்.

**<u>தமிழ் பன்னாட்டு நிறுவனங்களான</u>** மைக்ரோசா∴ப்ட், சோகோ கார்ப்பரேசன், கூகுள், யா∴ஹூ, எச் சி எல் டெக்னாலஜிஸ், ஆவ்ஸ்டர் டெக்னாலஜிஸ், ஏஇஎஸ் டெக்னாலஜி, டெஸிகுரு சல்யூசன்ஸ் மற்றும் அசைப்பட நிறுவனங்களான சான்ரா மீடியா, ஆக்சல் அனிமேசன் ஸ்டுடியோஸ் போன்ற நிறுவனங்கள் உருவாக்கிய தமிழ் வலைவாசல் மற்றும் உற்பத்திப் பொருள்கள், அசைப்படங்கள் இவ்வரங்குகளில் இடம் பெற்றுள்ளன.

**<u>தமிழ் மென்பொருள் மண்டலத்தில்</u>** உலகெங்கிலும் உள்ள முக்கிய தமிழ் மென்பொருள் இடங்களைப் பிடித்திருக்கும் நிறுவனங்கள் தங்களுடைய தமிழ் மென்பொருள் உற்பத்திப் பொருட்கள் பற்றி விளக்கமளிக்கவும், மொழிசார்ந்த மென்பொருள் மேம்பாட்டுத் துறையைச் சார்ந்த மென்பொருள் நிறுவனங்கள் பங்கேற்கவும் வசதி செய்யப்பட்டுள்ளன.

தமிழ் மென் பொருள் மண்டலங்களில் தமிழ் எழுத்துருக்கள், தமிழ் மென்பொருள்கள், கல்வி சார்ந்த பல்லூடக குறுந்தகடுகள், எழுத்து தேடுபொறி, இலக்கண தேடுபொறி, தமிழ் ஜாதகம், ஒருங்குறி

முதலியன இடம் பெறவுள்ளன. இம்மண்டலத்தில் இடம் பெற்றுள்ள சில நிறுவனங்கள் வள்ளி சாப்ட்வேர் சல்யூசன்ஸ், வானவில் சாப்ட்வேர், சாப்ட்வியூ, லோன் பர்ன் சிஸ்டம்ஸ், பாலாஜி இன்ஸ்டிடியூட் டிக கம்யூட்டர் கிராபிக்ஸ், லிங்க்சாப்ட் சல்யூசன்ஸ், கம்பன் சாப்ட்வேர், புரோ சாப்ட் சிஸ்டம், இன்போபெல்ஸ் இன்டர் ஆக்டிவ் சல்யூசன்ஸ், டவ் மல்டிமீடியா, கேவானிக்ஸ், நியூ ஆரிசான் மீடியா பி. லிமிடெட், டிக் சாப்ட், லேஸ்டெக் சிஸ்டம்ஸ், காட்கிராப் டிஜிடல்ஸ், டிரைஸ்டென் டெக்னாலஜிஸ், தமிழ் காலண்டர்.கோ.இன், ரேடியஸ் கன்சல்டன்சி பிரமோசன், ஐ டி என் எஸ் நெட் இன்டர்நேசனல், சிங்கப்பூர், யூனிவர்சல், பப்ளிசர்ஸ் மற்றும் பல

**தமிழ் வன்பொருள் மண்டலங்களில்** டி.வி.எஸ்.இ, விப்ரோ, ஹெச்.சி.எல், போன்ற மற்ற தமிழ் விசைப்பலகை மற்றும் மின்அச்சுப் பொறிகள் இடம் பெறும்

**தமிழில் மின்-பருவ இதழ் மண்டலத்தில்** அனைத்து முக்கிய தமிழ் மின் செய்தித் தாள்கள் மற்றும் மின் பருவ இதழ்களாகிய தினமலர், தினத்தந்தி, தினகரன், நக்கீரன். தமிழ் கம்யூட்டர், தின மணி முதலியன இடம் பெறுகின்றன. மின் இதழ்களின் பயன்பாடு குறித்து இவ்வரங்குகளில் விளக்கப்படும்.

**தமிழ் விக்கிப்பீடியா, தமிழ் 99 விசைப் பலகை மற்றும் வலைப்பூக்கள் மண்டலத்தில்** தமிழ் விக்கிப்பீடியா பக்கங்கள், தமிழ் வலைப்பூக்கள், தமிழ் யூனிகோடு, தமிழ்நெட் 99 விசைப்பலகை மற்றும் இதர வகைகளைப் பற்றி பார்வையாளர்கள் அறிந்துக் கொள்வதற்கான பயிலரங்குகள் நடத்த திட்டமிடபட்டுள்ளது,

**<u>கல்வி நிறுவனங்களாகிய</u>** அண்ணா பல்கலைக்கழகம் (சென்னை மற்றும் கோவை), MIT - AU KBC, வேலம்மாள் பொறியியல் கல்லூரி, தமிழ் நாடு விவசாயக் கல்லூரி, அமிர்தா பல்கலைகழகம், பாரதிதாசன் பல்கலைகழகம்- திருச்சி டாக்டர் அம்பேத்கார் சட்டக் கல்லூரிகளும் கண்காட்சியில் இடம் பெறவுள்ளன. இவ்வரங்குகளின் மூலம் கல்வித் துறையில் தமிழின் வளர்ச்சி மற்றும் மேம்பாடு குறித்து விளக்கப்படவுள்ளது. சிங்கப்பூர் அரசுக் கல்வித் துறை ஒரு அரங்கு அமைத்து சிங்கப்பூரின் கல்வி அமைப்பை பற்றி விளக்கவுள்ளது.

மக்களுக்கு பயன் தரத் தக்க மென்பொருள், இணைய தளம், மின் ஆளுமைத் திட்டங்கள் இக்கண்காட்சியில் இடம் பெற உள்ளன. மென் பொருள் மேம்பாட்டாளர்கள் / இணைய தள மேம்பாட்டாளர்கள் / அரசு மின் ஆளுமைத் துறை சார்ந்தவர்களை மக்கள் நேரடியாக சந்தித்து விவரங்களை அறிவதற்கு இக்கண்காட்சி மிகவும் உறுதுணையாக அமையும்.

மேலும், தமிழ்க் கணினித் துறையில் இருப்பவர்களுக்கு, இந்நிகழ்வு மிகவும் பெரியதும் முதன்மையானதுமான **தமிழ் பன்னாட்டுக் கண்காட்சியாக** அமையும்.